ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1791/28 - 2013 ජනවාරි මස 03 වැනි බ්‍රහස්පතින්දා - 2013.01.03

*1791/28 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 03 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

அறிவித்தல்

**இறால் வளர்ப்பு, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் தொழில் தொடர்பான சம்பளச் சபை**

(136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின் கீழ் இறால் வளர்ப்பு மற்றும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள தீர்மானங்கள் கௌரவ தொழில், தொழில் உறவுகள் அமைச்சர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளனவென அக்கட்டளைச் சட்டத்தின் 29 (3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இத்தீர்மானங்கள், 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆந் திகதியன்று நடைமுறைக்கு வருவனவாகும்.

டபிள்யூ. ஜே. எல். யூ. விஜயவீர,
செயலாளர்,
தொழில், தொழில் உறவுகள் அமைச்சு.

கொழும்பு,
2012, திசெம்பர் 27.

**அட்டவணை**

இறால் வளர்ப்பு , வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் தொழிலுக்கான சம்பளச் சபையினால் தீர்மானிக்கப்பட்டதும், 1999 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 04 ஆந் திகதிய 1073/26 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும், இறுதியாக 2010 ஆம் ஆண்டு யூலை மாதம் 30 ஆந் திகதிய 1664/24 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் மூலம் வேறுபடுத்தப்பட்ட அட்டவணைக்கு பின்வரும் பகுதி உள்ளடக்கப்படுதல் வேண்டும். இறால் வளர்ப்பும், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் தொழிலுக்கான I ஆம் பகுதியில் குறித்துரைக்கப்பட்டுள்ள வேலையாளர்களுக்கு ஏற்புடையனவாகவுள்ள நேரவேலைக்கான ஆகக் குறைந்த திரட்டிய மாதாந்த சம்பள வீதங்கள் II ஆம் பகுதியிலுள்ள நேரொத்த பதிவில் தரப்பட்டுள்ள வீதங்களாயிருத்தல் வேண்டும்:-

"பகுதி I

**தொழிலாளர் வகுப்பு**

**தேர்ச்சிபெற்ற தொழிலாளர்கள் :**

மேசன்மார், தச்சு வேலை செய்வோர், நீர் வழங்குவோர், தாங்கிகளிலிருந்து நீரை வெளியேற்றுவோர், வடிகால் நீரை இறைக்கும் நிலையக் கட்டுப்பாட்டாளர், வடிகால் நீர் இறைப்போர், நீர் ஓட்டத்தைக் கட்டுப்படுத்துவோர், ஒட்சிசன் வழங்குவோர், வெப்பநிலையைக்

கட்டுப்படுத்துவோர், உணவு, விற்றமின் மருந்துகளை வழங்குவோர், விலங்கு உணவுகளை வழங்கும் தொழிலாளர்/களஞ்சியப்பொறுப்பாளர்கள், அறுவடைகளைப் பொறுப்பேற்போர்/களஞ்சியப் பொறுப்பாளர்கள், சரிபிழை பார்ப்போர் / தரக்கட்டுப்பாட்டை மேற்கொள்வோர், வெட்டுவோர், சுத்தம் செய்வோர், இறால்களை வகை (தரம்) படுத்துவோர், சரிபிழை பார்ப்போர், தாங்கிகளை அமைக்கும் தொழிலாளர்கள், அறுவடைகளைச் சேகரிப்போர், படகுகளைச் செலுத்துவோர் (படகு ஓட்டுநர்கள்) பொதிகள் செய்வோர், குளிரூட்டப்பட்ட அறைகளில் ஈடுபடுவோர்.

**ஓரளவு தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள் :**

நிலத்தைச் செம்மையாக்கும் தொழிலாளர்கள், தாங்கிகளைக் காவல் காப்போர்/காவலாளர்கள், கயிறு இழுப்போர், முத்திரை பதிப்போர், செலோபேன் பைகளையும் காட்போட் பெட்டிகளையும் தயாரிப்போர், கல்வேலி அமைப்போரும், நடைபாதைகள் அமைப்போரும்.

**தேர்ச்சியற்ற தொழிலாளர்கள் :**

தாங்கிகளைச் சுத்திகரிப்போர், தாங்கிகளைப் பிராணிகளிடமிருந்து பாதுகாப்போர், குளீரூட்டப்பட்ட அறைகளைச் சுத்தம் செய்வோர் மேற்படி பந்திகளில் உள்ள வேலைகளுடன் தொடர்பான அல்லது அதனுடன் தொடர்பான இடை நிகழ்வான ஏதேனும் வேலைகளில் ஈடுபட்டுள்ள வேலையாட்கள்.

பின்வரும் தொழிலாளர்கள் இச்சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் தீர்மானங்களுக்கு உட்படமாட்டார்கள்:-

1. 02.11.1945 ஆம் ஆண்டின் 9,481 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ள மோட்டார் போக்குவரத்துத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் அத் தொழிலில் குறித்துரைக்கப்பட்டவாறான நன்மைகளும் கொடுப்பனவுகளும் செய்யப்பட வேண்டும்.
2. 07.01.1944 ஆம் ஆண்டின் 9224 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பொறியியல் தொழிலுக்கான சம்பளச் சபையில் (அதன் பின்னரான திருத்தங்கள்) குறிப்பிடப்பட்டுள்ள பொறியியல் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் அத்தொழிலில் குறித்துரைக்கப்பட்டவாறான நன்மைகளும் கொடுப்பனவுகளும் செய்யப்பட வேண்டும்.
3. எழுதுவினைஞர், காசாளர்கள், நேரப்பதிவாளர்கள், காவலாளர்கள்.

## பகுதி II

| ஊழிய ஆண்டு | பயிற்சி ரூபா ச. | இடைநிலைப்பயிற்சி ரூபா ச. | பயிற்சியற்ற ரூபா ச. |
|---|---|---|---|
| 1 ஆம் ஆண்டு | 10,400.00 | 9,920.00 | 9,500.00 |
| 2 ஆம் ஆண்டு | 10,550.00 | 10,045.00 | 9,600.00 |
| 3 ஆம் ஆண்டு | 10,700.00 | 10,170.00 | 9,700.00 |
| 4 ஆம் ஆண்டு | 10,850.00 | 10,295.00 | 9,800.00 |
| 5 ஆம் ஆண்டு | 11,000.00 | 10,420.00 | 9,900.00” |

1- 492

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.